நம்பிக்கை கோட்பாட்டிற்கான பேராயம்

1 ஆகஸ்ட் 2024

இந்தியாவின் வேளாங்கண்ணியில் மரியாவின் அன்பு

**தஞ்சாவூர் ஆயர் மேதகு சகாயராஜ் தம்புராஜ் அவர்களுக்கு கடிதம்**

மேதகு ஆயர் அவர்களே,

பதினாறாம் நூற்றாண்டில் தொடங்கிய பக்தியான வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் திருத்தலத் திருவிழா நெருங்கி வருகிறது.

இந்த மேன்மை பொருந்திய வழிபாட்டுத் தலம் ஏழை மற்றும் நோயுற்ற சிறுவர்களுடன் கன்னி மரியா கொண்ட சில சந்திப்புக்களைச் சார்ந்த மிக அழகிய மரபுகளைக் கொண்டது. இவ்வாறு, அனைவரின் அன்னையாக இயேசு நமக்கு விட்டுச் செல்ல விரும்பிய மரியாவின் கனிவும் உடனிருப்பும் வெளிப்படுகின்றன.

மரியாவின் பரிந்துரையால், இயேசு கிறிஸ்து மீண்டும் மீண்டும் தனது வல்லமையை வெளிப்படுத்தி, நோயுற்றோரை நலமாக்குகிறார். இந்த காரணத்திற்காக, 2002-ஆம் ஆண்டில், புனித இரண்டாம் ஜாண் பால் உலக நோயுற்றோர் தினம் அங்கு கொண்டாடப்பட விரும்பினார். ஏனென்றால், லூர்து நகரில் தம்மை வெளிப்படுத்திய அதே கன்னி மரியா, இந்தியாவிலும் ஆரோக்கியத் தாயாக தம்மை வெளிப்படுத்தியுள்ளார்.

அங்கு வெறும் உடல் சார்ந்த நலம் மட்டுமல்ல, ஆன்ம நலனும் கிடைக்கிறது. ஏனென்றால், மரியாவின் திருவுருவின் முன், நமது கவலை, ஏக்கம், மற்றும் அச்சங்களை குணப்படுத்த வல்ல இயேசு கிறிஸ்துவின் முழு அன்பை நாம் காண்கிறோம். அன்பிலும் இறைநம்பிக்கையிலும் மரியாவின் முன் ஒரு சிறுபொழுது மட்டும் நாம் அமர்ந்தால் கூட, அவருடைய தாய்மையின் பார்வை நமக்கு அமைதியை அருள்கிறது.

மரியாவின் மிகவும் பழமையான முதல் தோற்றம் ஆழமான பொருள் நிறைந்த ஒன்றாகும். ஏனென்றால், அவர் காட்சி கொடுத்த சிறுவன் தான் கொண்டு வந்திருந்தப் பாலை மரியா தன் கரங்களில் தாங்கியிருந்த குழந்தைக்கு வழங்கினான். இது தங்கள் ஏழ்மையிலும் தம்மிடம் உள்ளதை பிறருடன் பகிர்ந்து கொள்ளும் தாராள குணம் கொண்டவர்களின் பெருந்தன்மையின் வெளிப்பாடாகும். தாராள மனமுள்ளவராக வாழ அதிக செல்வம் கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நம்மை நாடி வருவாரோடு பகிர்தல், உதவுதல், உடனிருத்தல் என்ற இந்த அழைப்பு அத்திருத்தலத்தில் எப்போதும் எதிரொலிக்கட்டும். "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25, 40) என்ற இயேசுவின் வார்த்தைகளை வாழ்ந்து காட்டும் தாராள மனம் கொண்ட தனது பிள்ளைகளை அன்னை மரியா அன்பு செய்கிறார்.

பல நூற்றாண்டுகளாக, மரியா அத்திருத்தலத்தில் தொடர்ந்து செயலாற்றி வருகிறார். சில போர்த்துகீசிய மாலுமிகள் கன்னி மரியா பெரும்புயலிருந்து அவர்களை எவ்வாறு காப்பாற்றினார் என்பதையும், அதன் பின்னர் ஆலயம் ஒன்றைக் கட்டி எழுப்ப அவர்கள் முடிவு செய்ததையும் குறித்த தகவல்களை விட்டுச்சென்றிருக்கிறார்கள். 2004-ஆம் ஆண்டில் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியின் அழிவுகரமான வெள்ளம் ஆலயத்தை சேதப்படுத்தாததை நம்மால் எப்படி நினைவுகூராமல் இருக்க முடியும்?

இறைநம்பிக்கையுடன் வரும் கோடிக்கணக்கானத் திருப்பயணிகளும் அத்திருத்தலத்தில் விளையும் ஏராளமான ஆன்மீகக் கனிகளும் அங்கு *தூய ஆவியார் தொடர்ந்து செயல்படுகிறார்* என்பதை நாம் கண்டுக்கொள்ளச் செய்கின்றன.

ஆறுதல் தேடி வரும் கிறிஸ்தவர் அல்லாத பல திருப்பயணிகளிலும் இது போன்ற உணர்வு வெளிப்படுகிறது. அவர்களில் சிலர் தங்கள் நோய்களிலிருந்து குணம் பெறுகிறார்கள்; வேறு பலர் அமைதியும் நம்பிக்கையும் பெறுகிறார்கள். மரியாவின் வேண்டுதலால் தூய ஆவியார் அவர்களிலும் செயலாற்றுகிறார் என்பதில் ஐயமில்லை. இது பல மதங்களின் ஒருவித ஒத்திசைவு அல்லது கலவை என்று கருதப்படக்கூடாது. அத்திருத்தலமானது, அனைவரையும் ஏற்றுக்கொள்பவரும் அவரைப் பற்றி சிந்திப்பவர்களுக்கு இறைவனின் அன்பை வெளிப்படுத்துபவருமான மரியாவின் உடனிருப்பை வெளிப்படுத்தும் ஓரிடமாகும். கத்தோலிக்க திருஅவையின் அருள்அடையாளங்களைப் பெற முடியாதவர்களுக்கு இயேசுவின் அன்னை வழங்கும் ஆறுதலை மறுக்க முடியாது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து, இந்த இறைநம்பிக்கைத் திருத்தலத்தின் ஆன்மீக அழகை நான் நினைத்துப் பார்க்கிறேன். நம்பிக்கையுள்ள திருப்பயணிகள் செய்யும் பொது மக்கள் பக்தியில் திருத்தந்தை மிகவும் அக்கறை கொள்கிறார்; ஏனெனில், இத்திருப்பயணிகள் மரியாவின் கரங்களில் இருக்கும் இயேசுவைத் தேடி, தங்கள் வேதனைகளையும் நம்பிக்கைகளையும் அன்னையின் இதயத்திடம் ஒப்படைக்கும் பயணிக்கும் திருஅவையின் அழகைப் பிரதிபலிக்கிறார்கள். இக்காரணத்திற்காக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அந்த இறைநம்பிக்கை தலத்தின்மீது தாம் கொண்டிருக்கும் பெரும் மதிப்பை உங்களுக்குத் தெரிவிக்குமாறும், அத்திருத்தலத்தின் செப்டம்பர் மாத விழாக்கொண்டாட்டங்களின் தயாரிப்பைக் கருத்தில் கொண்டு, அனைத்து திருப்பயணிகளுக்கும் தமது தந்தைக்குரிய ஆசீரை வழங்குமாறும் என்னைக் கேட்டுக்கொண்டார்கள்.

இயேசுவில் சகோதர அன்புடன்,

**கர்தினால் விக்டர் மானுவல் பெர்னாண்டெஸ்**

*பேராய முதல்வர்*

EX AUDIENTIA DIEI 01.08.2024

Franciscus